www.padippakam.com

# கழகத்தோழர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளால் சுட்டுக்கொலை.

தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தோழர்கள் மூவர் தமிழீழ விடுதலைப்புலிகளால் அரியாலையில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். கடந்த 11-12-1985 அன்று யாழ்-அரியாலைப்பகுதிக்கு களவாக மணல் ஏற்றவந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை அப்பகுதிக் கண்காணிப்புக் குழுவின் உதவியுடன் தடுத்த கழகத் தோழர் தாக்குதலுக்கு உள்ளானார். கத்தியாலும் வாளாலும் அவர் வெட்டப்பட்டார். இப்பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வொன்றைக் காண அவ்விடம் சென்ற எமது கழகத் தோழர்கள் மூவர் தமிழீழவிடுதலைப் புலிகளின் விக்டர் என்பவரின் தலைமையிலுள்ள கோஷ்டியினால் கத்தியால் வெட்டப்பட்டு, பொல்லுகளால் தாக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு பரிதாபமாக சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். மக்களுக்கு நியாயம் கிடைக்க, நீதியான முடிவைத் தேடிச் சென்றுள்ளவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் சித்திரவதையுடன் கூடிய மரண தண்டனையை வழங்கியுள்ளனர். அரியாலையில் களவாக மணல் ஏற்றி வியாபாரம் செய்வது வழமையாக நடைபெற்று வருவதே. இது காரணமாக அப்பகுதி மக்கள் கடல் அரிப்பினால் தமிழீழம் பறிபோவதை உணர்ந்து திருட்டு மணல் ஏற்றும் நடவடிக்கைகளை தொடர்ந்து தடுத்து வந்துள்ளனர். கண்காணிப்புக் குழு மூலம் தமது நிலப் பாதுகாப்பை உறுதி செய்து கொண்டனர். ஆனால் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக சில விடுதலை இயக்கங்கள் துப்பாக்கி முனையில் மக்களை விரட்டிவிட்டு மணலை ஏற்றிச் சென்று விற்று வந்தமையால், மக்கள் ஆத்திரத்துக்குள்ளாகி, மனம் வேதனைப்பட்டு எமது மக்கள் அமைப்புத் தோழர்களை அணுகி முறையிட்டனர். இதனால் எமது தோழர்கள் அப்பகுதி மக்கள் உதவியுடன் களவாக மணல் ஏற்ற வந்தவர்களைத் தடுத்து வந்துள்ளனர். இவ்விதமான சம்பவமே கடந்த 11.12.85 இல் நடைபெற்றதாகவும், கள்ள மணல் ஏற்ற வந்தவர்களைத் தடுத்தபோது அவர்கள் எமது கழகத் தோழர்கள் சிலரையும், பொது மக்கள் சிலரையும் தாக்கியுள்ளனர். வாளாலும் கத்தியாலும் எமது தோழர்கள் தாக்கப்பட்டுள்ளனர். இச் சம்பவத்தையிட்டு ஏற்பட்ட பதட்ட நிலையைத் தீர்த்து வைக்கவும், தொடர்ந்தும் அப்பகுதியில் மணல் ஏற்றுவதால் ஏற்படும் ஆபத்துக்களை விளக்கிடவும் எமது மக்கள் அமைப்பின் முக்கிய உறுப்பினரான, கொக்குவிலைச் சேர்ந்த தோழர். ரவிமூர்த்தி, கைதடியைச் சேர்ந்த பண்டா, அரியாலையைச் சேர்ந்த ஜெயதீஸ்வரன் ஆகியோர் சென்றனர். ஆனால் பிரச்சினையைத் தீர்க்க விரும்பாத தமிழீழ விடுதலைப் புலிகள், சமரசம் செய்ய வந்த கழக உறுப்பினர்களை தடிகளரால் அடித்தும், கத்தியால் வெட்டியும் பின் துப்பாக்கியால் சுட்டும் படுகொலை புரிந்துள்ளனர். விடுதலைக்காகத் தம்மை ஒரு இயக்கத்துடன் இணைத்துக் கொண்டு, மக்களுடன் மக்களுக்காக வாழ்ந்து அம்மக்களின் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கச் சென்ற எம் தோழர்கள் விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டார்கள். எமது எதிரி யார்? எமது எதிரி யார்?? எமது எதிரி யார்???. என்பதைச் சரியாக அறிந்து கொள்ள முடியாதவர்கள் விடுதலைப் பாதையின் ஒட்டு மொத்தக் குத்தகைக்காரர் மனப்பான்மையில் நடந்து கொண்டுள்ளனர். இந்தச் சம்பவம் மட்டுமல்ல, தமிழீழ விடுதலைப் புலிகளின் கொலைப்பட்டியல் தொடர் தோழர் சுந்தரத்திலிருந்து நீண்டு கொண்டிருக்கிறது. இன்று ரவிமூர்த்தி, ஜெயதீஸ்வரன், பண்டா வழி வந்துள்ளது. மறைந்த எமது தோழர்களுக்கு எமது வீர அஞ்சலியைச் செலுத்துகிறோம். இப்படுகொலைகளைப் புரிந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த விக்டரும், அவனது கூட்டாளிகளும் போராளிகளையும், பொதுமக்களையும் பலதடவைகள் படுகொலை செய்ததன் மூலம் மக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்தவர்கள். இவர்களுக்கெதிராக பல தடவைகள் பொதுமக்கள் ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் உண்ணாவிரதங்களும் மேற்கொண்ட சம்பவங்களும் உண்டு. இப்படிப்பட்ட சம்பவங்களைப் புரியும் விக்டர் போன்றவர்களையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் வன்மையாகக் கண்டிப்பதோடு, இவர்களது இத்தகைய செயல்கள் முதலாளித்துவ அரசுக்கும், பிற்போக்குச் சக்திகளுக்கும் உரிய வாய்ப்பாக அமையும் என்பதையும் தெரிவித்து எச்சரிக்கிறோம். மக்களை இணைத்துக் கொள்ளாது மக்களிடமிருந்து தனித்து நின்று ஆயுதமேந்தி அடாவடித்தனங்கள் செய்வதாலும், மாற்றுக் கருத்துடையவர்களைப் படுகொலை புரிவதாலும் தமிழீழ விடுதலைப் போராட்டம் பின் தள்ளப்படும் என்பதை அவர்கள் அறிய வேண்டும்.

" அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறிவோம்"

" மலர்க தமிழீழம் "

செய்தித் தொடர்புத் திணைக்களம்
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்.
15.12.1985.

இவ்வண்ணம்,
இரா. வாசுதேவா (ஒப்பம்)
அரசியல் துறைச் செயலர்.

படிப்பகம்